## கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு பகுதி - III
## 2009/2010 (நவெம்பர்/டிசம்பர் - 2010)

## GEOS 4104 மனிதவள அபிவிருத்தி

நேரம் : 03 மணித்தியாலங்கள்

எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்குக.

---

01. ‘வளர்முக நாடுகளின் மனிதவள அபிவிருத்தி என்பது இன்னும் குழந்தைப்பருவ நிலையிலேயே உள்ளது.’ இக்கூற்றின் உள்ளடக்கத்துடன் நீர் உடன்படுகின்றீரா? இலங்கையிலிருந்து உதாரணங்கள் தந்து இக்கூற்றினை ஆராய்க.

(25 புள்ளிகள்)

02. (i) தொழிற்படை பற்றி திட்டமிடும் திட்டமிடலாளர்கள் கருத்தில் கொள்ளவேண்டிய முக்கிய விடயங்களைச் சுருக்கமாக விளக்குக.

(10 புள்ளிகள்)

(ii) உலக ரீதியாக இடம்பெற்று வரும் தொழில்நுட்ப மாற்றமானது வளர்முக நாடுகளின் தொழிற்படையில் ஏற்படுத்தி வரும் தாக்கங்களைச் சுருக்கமாக விளக்குக.

(15 புள்ளிகள்)

03. (i) ‘மனிதவள அபிவிருத்தியினை இனங்காண்பதற்கு அந்த மானிட சமூகத்தின் கல்வி நிலையும், ஆரோக்கிய நிலையும் பெரிதும் உதவுகின்ற மாறிகளாகும்.’ இக்கூற்றின் உள்ளடக்கத்தினை விளக்குக.

(07 புள்ளிகள்)

(ii) ஆரோக்கியமான குடித்தொகை ஒன்றினை அளவிடுவதற்கு பயன்படும் குறிகாட்டிகள் எவ்வளவு தூரத்திற்கு அந்நிலையினை வெளிப்படுத்தி நிற்கின்றன?

(08 புள்ளிகள்)

(iii) இலங்கையில் ஆரோக்கியமான தொழிற்படை ஒன்றினை உருவாக்குவதில் சுகாதாரத் துறையின் பங்களிப்பினை விளக்குக.

(10 புள்ளிகள்)

04. மனிதவளத் திட்டமிடல் தொடர்பாக உலக ரீதியாக முன்வைக்கப்பட்ட புதிய அணுகுமுறைகளை எடுத்துக்கூறி அவற்றில் ஏதாவது இரண்டினைப் பற்றி சுருக்கமாக விளக்குக.

(25 புள்ளிகள்)

05. இலங்கையில் 1945ஆம் ஆண்டு முதல் இன்று வரையில் மனிதவள அபிவிருத்தியின் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட கல்வி சார்ந்த நடவடிக்கைகளை நுணுகி ஆராய்க.

(25 புள்ளிகள்)

06. பின்வருவனவற்றில் **இரண்டிற்கு** சிறுகுறிப்பு எழுதுக.

(i) சந்தைப் பொருளாதார நாடுகளில் மனித வளத்தைத் திட்டமிடல்

(ii) மனிதவள அபிவிருத்தியில் பெண்களின் பங்களிப்பு

(iii) வெளிநாட்டு வேலை வாய்ப்பும் இலங்கையும்

(12 ½ x 2 = 25 புள்ளிகள்)

*********